சார்பு நீதிமன்றம், பண்ருட்டி. நாள்:28.08.2025

O.S. No.25/2015

பி.வா.சா.1 - செந்தில் (எ) செந்தில்குமார்

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் நாள் மேற்குறிப்பிட்ட சாட்சியாகிய பி.வா.சா.1 ன் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ஜெ.அன்வர் சதாத். பி.காம். எம்.எல். சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்படுகிறது.

<u>சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்திய பிரமாணத்தின் பேரில் வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் படிக்கவில்லை. கையெழுத்து எப்படிபோடுவேன் என்றால் அதற்கு மட்டும் கற்றுக்கொண்டேன். உடன் பிறந்தவர் எத்தனை பேர் என்றால் என்னுடன் சேர்ந்து மூவர். அவர்கள் வெளியூரில் உள்ளார்கள் என்றால் இல்லை உள்ளூரிலே தனித்தனியாக வசிக்கிறார்கள். நான் என் அம்மாவுடன் வசிக்கிறேன் என்றால் சரிதான். நான் காங்கிரஸ் கட்சியில் வட்டார தலைவராக உள்ளேனா என்றால் துணை தலைவராக உள்ளேன்.

2. நாட்டு நடப்பு தெரியுமா என்றால் தெரியாது. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் செங்கல் சூலையில் வேலை செய்கிறேன் . தற்போது என்ன வேலை செய்கிறேன் என்றால் சிறுத்தூர் தாமோதரன் சூலையில்வேலை செய்கிறேன். அவ்வாறு வேலை ஏதும் செய்யவில்லை பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் கட்டிட மேஸ்திரி என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வேலைக்கும் செல்வேன் அந்த வேலைக்கும் செல்வேன். மேஸ்திரி வேலை செய்யமாட்டேன், கொத்தனார் வேலை செய்வேன்.

3. எனக்கு வாதியை எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் 15 வருடங்களாக தெரியும். இந்த வழக்கு 2015 ல் தாக்கல் செய்தது என்றால் சரிதான். 10 வருடங்களில் நான் இப்போது தான் முதல் முறையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இவ்வழக்கு 2018 ல் வாதிக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளது பின்னர் மனு அளித்து நான் அதனை ரத்துசெய்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு இன்னோரு முறையும் ஆகியுள்ளது என்றால் சரிதான். நான் வாதியிடம் ரூ.1 லட்சம் வாங்கி கொண்டு தான் அக்ரிமெண்டில் கையொழுத்து போட்டுள்ளேன் என்று

சொன்னால் சரியல்ல, நான் அவரிடம் 50 ஆயிரம் கடன் பெற்றேன். தாவா சொத்து என் அம்மாவிற்கு மட்டும் தான் பாத்தியமான சொத்து என்றால் இல்லை, என் அண்ணன்களும் உள்ளார்கள்.

4. என் அம்மா சுயமாக கிரையம் பெற்ற சொத்து என்பதால் என் அம்மாவிற்கு மட்டும் பாத்தியமான சொத்து என்று சொன்னால் சரியல்ல. என் அம்மா வீட்டில் நான் இருப்பதால் என் அம்மாவிற்கு பாத்தியமான சொத்து என்பதால் நாங்கள் இருவரும்சேர்ந்து தான் கிரைய ஒப்பந்தத்தை எழுதிக்கொடுத்துள்ளோம் என்று சொன்னால் மனதார எழுதிக்கொடுக்கவில்லை. தாவா கிரைய ஒப்பந்தம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் புதுப்பேட்டை சார் பதிவாளர் அலுவலகம் எதிரே உள்ள எழுத்தர் ஆபிசில் வைத்து எழுதப்பட்டுள்ளது.

5. பொதுவாக, இருத்தரப்பினரையும் வைத்து பத்திர எழுத்தர் வாசகத்தை படித்துக்காட்டுவார் என்று சொன்னால் ஆனால் என்னிடம் படித்துக்காட்டவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையெழுத்து போடுவதற்கு முன்னர் நானோ என் அம்மாவோ  படித்து காட்டும் படி எழுத்தரை கேட்டோமா என்றால் கேட்டோம், அவர்கள் படித்துக்காட்டவில்லை, கையெழுத்து மட்டும் போட்டுவிட்டு செல்லும் படி சொன்னார். நான் படித்துகாட்டவில்லை என்றால் கையெழுத்து போடமாட்டேன் என்று சொல்லவில்லையா என்றால் சொல்லவில்லை.

<u>நீதிமன்ற கேள்வி</u>

ஏன் கேட்கவில்லை என்றால்  பணத்தை கொடுத்துவிட்டு 1 வருடம் கழித்து கொடுக்கும் படி சொன்னார்கள், ஒரு வருட கழித்து கொடுத்தேன் வாங்கவில்லை.

6. நிலத்தரகர் குமார் மூலம் தான் இந்த கிரைய ஒப்பந்தம் பேசப்பட்டு எழுதப்பட்டது என்றால் சரிதான். ஆகவே படித்துக்கட்டவில்லை என்று சொல்வதும், ஆவணத்தில் என்ன உள்ளது என்பது தெரியவில்லை என்று சொல்வதும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி தாவா கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரிதான். பதிவு செய்யும் போது சார் பதிவாளர் பணம் பெற்றுக்கொண்டீர்களா என்று கேட்டு தான் பதிவு செய்வார் என்றால் என்னிடம் கேட்டார், அதற்கு நான் 50 ஆயிரம் வாங்கினேன் என்று சொன்னேன், அதற்கு அங்கிருந்தவர்கள் மீதி பணம் பிறகு தருவார்கள் என்று சொன்னார்கள். அவ்வாறு நான் ஏதும் சார் பதிவாளரிடம்சொல்லவில்லை, அவ்வாறு

சொல்லியிருப்பின் ஆவணம் பதிவு செய்யப்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல.

7. எனது சாட்சியத்தில் வாதி அனுப்பிய அறிவிப்புக்கு பின்னர் வாதியிடம் சென்று கேட்டபோது அசல் 50 ஆயிரமும், அதற்கு 36 சதவீத வட்டியும் சேர்தது கொடுத்தால், நோட்டீஸ் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கபோவதில்லை என்று கூறியதற்கு ஒரு மாதத்தில் ஏற்பாடு செய்வதாக நாங்கள் சொன்னதற்கு அதனை ஏற்றுக்கொண்ட வாதி சிலரின் தூண்டுதலால் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளதாக நான் சாட்சியத்தில் சொல்லியுள்ளது தவறானது என்று சொன்னால் அவ்வாறு இல்லை, வாதி உடனடியாக 7 லட்சம் பணம் கேட்டார், இல்லையென்றால் வழக்கில் பார்த்துக்கொள்ளுமாறு கூறினார். இந்த விஷயத்தை நான் சாட்சியத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் நான் சொல்லியுள்ளேன், இவ்வாறு சொன்னது பொய் என்றால் சரியல்ல.

8. என்னிடம் காட்டப்படம் சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் ஆமாம். மேற்படி சாட்சியத்தில் பக்கம் 3 ல் பத்தி 5 ல் வாதி சொன்னதை நம்பி ஒப்பந்தத்தில் கையெழுத்து போட்டபின்னர் வாதியை நாங்கள் சந்திக்கவே இல்லை என்று சாட்சி சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அது தவறு நான் அவ்வாறு சொல்லவில்லை, நான் அவரை சந்தித்தேன், 7 லட்சம் கொடுக்க வேண்டும் என்று கேட்டார், வழக்கில் பார்த்துக்கொள்ளுமாறு சொன்னார். நான் சொல்வது முன்னுக்கு பின் முரணாகவும் பொய்யாக உள்ளது என்றால் சரியல்ல.

9. எங்களுக்கு ஏற்பட்ட பண கஷ்டத்திற்காக தான் இந்த கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது என்று சொன்னால் மனதார ஏற்படவில்லை. என் நம்பி யாரும் பணம் தரமாட்டார்கள் சொத்தை நம்பி தான் வாதி இந்த கிரைய ஒப்பந்த்தை ஏற்படுத்தியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து ரூ.2,50,000/- மதிப்பு உள்ளதாக எனது சாட்சியத்தில் சொல்லியுள்ளேன் அதற்கு ஆதாரம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் அவ்வாறு சொல்லவில்லை. ஆகவே, நானும் என் அம்மாவும் ஒப்பந்தப்படி வாதிக்கு கிரையம் எழுதித்தர கடமைப்பட்டவர்கள் என்று சொன்னால் சரியல்ல.

10. வழக்கு அம்சங்கள் உண்மை என்பதால் தான் வாதி அனுப்பிய அறிவிப்பு

நான் பதில் தரவில்லை என்று சொன்னால் கொடுக்கவில்லை. அதனால் இவ்வழக்கு வாதி கோரிய படி தாவா செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Dated.28.08.2025 Sub Judge, Panruti.